## 26.2 மாவட்ட ஊராட்சிகளுக்கு சீருந்து வாங்குதல் மற்றும் ஓட்டுநர் பணியிடம் தோற்றுவித்தல்

ஊரக வளர்ச்சி (சி) துறை

அரசாணை (நிலை) எண். 256 நாள் : 13.12.1996

படிக்க :

1. அரசாணை (நிலை) எண் 228, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 15.10.96.
2. ஊரக வளர்ச்சி இயக்குநர் நேர்முக கடித எண் 52476/95 பிசிஎ,1, நாள் 12.11.96.

**ஆணை**

ஒவ்வொரு மாவட்ட ஊராட்சியும் அதன் அலுவலகம் அமைக்க தேவையான மூலதனச் செலவுகளை செய்ய ஒவ்வொரு மாவட்ட ஊராட்சிக்கும் அளிக்கப்பட்ட மான்யத் தொகையாகிய :ரு. 1 கோடியில் ரூ. 15 லட்சத்திற்கு மிகாமல் செலவுச் செய்துக்கொள்ளலாம் எனவும், ஒவ்வொரு மாவட்ட ஊராட்சித் தலைவருக்காக ஒரு ஜீப்பும் வாங்கிக்கொள்ளவும் மேலே படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆனால் ஊரக வளர்ச்சி இயக்குநரோ மாவட்ட அளவில் உள்ள அலுவலர்கள் பெரும்பாலும் சீருந்து (Car) பயன்படுவதைச் சுட்டிக்காட்டி ஒவ்வொரு மாவட்ட ஊராட்சித் தலைவருக்கும் சீருந்து வழங்குவதே பொருந்தும் என கூறியுள்ளார். மேலும் ஏற்கெனவே ஒப்புதல் அளிக்கப்பட்ட ஜீப்பும் சீருந்து போகஇயலாத இடங்களுக்கு பயன்படுத்தலாம் எனக்கூறி, ஏற்கெனவே ஒப்புதல் அளிக்கப்பட்ட ஒரு ஜீப்புடன் கூடுதலாக ஒரு சீருந்தை (Car) ஒவ்வொரு மாவட்ட ஊராட்சி தலைவக்கு ஒப்புதல் அளிக்குமாறும் ஜீப்பு மற்றும் சீருந்தை இயக்க இரண்டு ஊர்தி ஓட்டுநர்கள் பதவிகளை உருவாக்கவும் கோரியுள்ளார்.

2. அரசு ஊரக வளர்ச்சி இயக்குநரின் கருத்துருவினை நன்கு ஆய்வு செய்து, ஒவ்வொரு மாவட்ட ஊராட்சிக்கும் மேலே படிக்கப்பட்ட அரசாணையில் அனுமதிக்கப்பட்ட ஜீப்புக்கு பதிலாக ஒரு அம்பாசிடர் சீருந்து (பெட்ரோல் அல்லது டீசல்) வழங்கலாமென அரசு அனுமதியளிக்கிறது. மேலும், இச்சீருந்தை இயக்க ஒவ்வொரு மாவட்ட ஊராட்சிக்கும் ஒரு ஓட்டுநர் பதவியும் ரூ. 975–25–1150–30–1660 னை ஆதிய விகிதத்தில் உருவாக்கிக்கொள்ளவும் ஆணையிடுகிறது.

3. இவ்வரசாணை நிதித்துறையின் இசைவினை அதன் 3.12.96 நாளிட்ட அ.சா.கு.எண் 5294/நிசெ/தனி/96 ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**எஸ்.நாராயண்**
அரசு செயலாளர்